பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 08 திங்கட்கிழமை (22.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 175

# புலிகளின் துணைத் தளபதி ரமணன் சினைப்பர் தாக்குதலில் உயிரிழப்பு!



## வவுணதீவு முன்னரங்க நிலைகளை பார்வையிட்டபோது நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு,மே22

**விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணன் (வயது 41) நேற்று மாலை 4.30 மணியளவில் வவுணதீவில் இடம்பெற்ற சினைப்பர் தாக்குதலில் உயிரிழந்தார். வவுணதீவில் உள்ள தமது முன்னரங்க நிலைகளை அவர் நேற்றுப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத் துணைத் தளபதி ரமணன் (உலகநாதன் - பழுகாமம், மட்டக்களப்பு) நேற்று மாலை வவுணதீவில் உள்ள முன்னணிக் காவலரண்களின் பாதுகாப்பை அவதானித்துக் கொண்டிருந்தார்.

அச்சமயம் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளில் இருந்து முன்னூறு மீற்றர் தூரத்தில் வவுணதீவு இராணுவ முகாம் அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்பில் இருந்து கருணா குழு வெளியேற்றப்பட்ட சமயம், வன்னி வந்து தலைமையுடன் நிலைமைகளை ஆராய்ந்தவர் துணைத்தளபதி ரமணன். அதன்பின் மட்டக்களப்புக்குப் புறப்பட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடத்தல்பளையில் குடும்பஸ்தர் சூட்டுக்கிலக்காகி மரணமானார்

யாழ்ப்பாணம்,மே22

விடத்தல்பளையில் உள்ள தனது தோட்டத்துக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

அருணாசலம் சுரேஷ் குணபாலன் (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை நேற்றுக் காலை விடத்தற்பளையில் உள்ள தனது தோட்டத்திற்கு சென்றார்.

நேற்று மாலை வரையும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரது உறவினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜிடம் முறையிட்டனர்.

பிரஸ்தாப நபர் தொடர்பக படை அதிகாரிகளுடன் ரவிராஜ் எம்.பி நேற்றிரவு தொடர்பு கொண்டார். பிரஸ்தாப நபர் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் நுழைந்த காரணத்தால் சுடப்பட்டார என்று படையினர் பதிலளித்தனர் என ரவிராஜ் எம்.பி. தெரிவித்தார்.

## அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது மூதூரில் நேற்று கைக்குண்டு வீச்சு

### வெளிநாட்டுப் பிரஜை உட்பட மூவர் காயம்

திருகோணமலை,மே22

திருகோணமலை, மூதூர் பிரதேசத்திலுள்ள மூன்று அரசசார்பற்ற நிறுவனங்க ளின் மீது நேற்றுப் பிற்பகல் 3.15 மணி முதல் 3.30 மணி வரையான நேரத்தில் கைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வன்முறையற்ற அமைதிக்கான அமைப்பு உட்பட மூன்று சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களே கைக்குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகின.

இந்தச் சம்பவங்களில் சேர்பிய நாட்டுப் பிரஜையான பபிஜான் பெறிஸ்கிக் என்பவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர் என்று மூதூர்ப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் மூதூர்ப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (க)

## வலி.மேற்கில் நேற்றுத் தேடுதல்

வலி.மேற்குப் பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.

சித்தன்கேணி, டச்சுவீதி, வழக்கம்பரை, கலைவாணி வீதி, பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது பொலீஸாரும் இராணுவத்தினரும் வீடு வீடாகச் சென்று சோதனை மேற்கொண்டனர். தேடுதல் நடவடிக்கை முற்பகல் 11 மணிவரை இடம் பெற்றது. இந்தத் தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. (175)

## மூதூர் புலிகள் பகுதிக்குள் படையினர் ஊடுருவித் தாக்கு

### பொதுமகன் பலி; போராளிகளின் முகாம் எரிப்பு

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் வயலில் நின்ற அப்பாவிப் பொதுமகன் ஒருவரைச் சுட்டுக்கொன்று விட்டு விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றையும் எரியூட்டியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

புலிகளின் நிர்வாகப் பகுதியான அதியமான்கேணி பிரதேசத்திற்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அத்துமிறி நுழைந்தனர் என்று கூறப்படுகின்றது.

அப்பகுதி வயலில் மாடு மேய்த்துக் கொண்டு

(08ஆம் பக்கம் பார்க்க)

## சேருநுவரவில் கிளைமோர்த் தாக்கு சிப்பாய் பலி; மற்றொருவர் காயம்

திருகோணமலை மாவட்டம் சேருநுவர, லிங்கபுரம், 3ஆம் வாய்க்கால் இடது கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதிச் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியை இராணுவத்தினரும் பொலீஸாரும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர் எனத் திருமலைத் தகவல்கள் தெரிவித்தன. (க)

## வந்தாறுமூலையில் சிறுவன் கோலை!

மட்டக்களப்பு,மே22

மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் இரவு 12 வயதுச் சிறுவன் ஒருவன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவனான செல்வராஜா ரவிச்சந்திரன் என்பவ்ரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சிறுவன் தனது பேர்த்தியாரின் வீட்டில் நின்றபோது அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் சிறுவன் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர் என்று கூறப்பட்டது.

பிரஸ்தாப சிறுவன் சுடப்பட்ட இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் படையினரின் முகாம் ஒன்று அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது (க)

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்

## கொழும்பில் ஐ.தே.க.; கிழக்கில் மு.கா. தெற்கில் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி!

கொழும்பு,மே22

நேற்றுமுன்தினம் நடந்துமுடிந்த 20 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஐந்து சபைகளையும், ஐக்கிய தேசியக் கட்சி நான்கு சபைகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு சபைகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி, முஸ்லிம் தேசிய காங்கிரஸ், தேசிய அபிவிருத்தி முன்னணி, இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி என்பன தலா ஒவ்வொரு சபைகளையும் கைப்பற்றியுள்ளன.

அதேசமயம், [illegible] எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுடனான மூக்குக்கண்ணாடிச் சின்னத்தைக் கொண்ட சுயேச்சைக் குழு வெற்றிபெற்றது.

[illegible] நடந்து முடிந்த ஏனைய

(08ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி சிப்பாய் உயிரிழப்பு!

கொழும்பு,மே22

வவுனியா இலுப்பங்குளம் பகுதியில் நேற்றுக்காலை மிதிவெடியில் சிக்கி படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே இவ்வாறு மிதிவெடிக்கு இலக்காகினர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடலில் சுதந்திரமாக தொழில்புரியும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும்

## யாழ்.அரச அதிபரிடம் வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் வலியுறுத்து

யாழ்ப்பா ணம்,மே22

எமது கடலில் எதுவித கெடுபிடிகளுமில்லாமல் சுதந்திரமாகத் தொழில் புரிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம்.

இது தொடர்பாக சமாசம் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளது.

அந்த மகஜரில் -

அண்மையில் வெற்றிலைக்கேணியில் இடம்பெற்ற கடற்சமரை அடுத்து வடமராட்சி வடக்குக் கடலில் தொழில் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் தடையால் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் கற்கோவளம் தொடக்கம் தொண்டைமானாறு வரையிலான 13 கிராமங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 150குடும்பங்களும் -

இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசித்துவரும் ஆயிரத்து 650 குடும்பங்களும் -

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயிரத்து 450 குடும்பங்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடலோரத்தில் வாழும் கடற்றொழில் புரியும் மக்கள் மட்டுமல்ல யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற அனைத்து தமிழ்பேசும் மக்களும் நிம்மதியாக வாழமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது. இரவில்கூட நிம்மதியாக நித்திரை செய்யக் கூட முடிகிறதா? எந்த நேரம் யார் கொல்லப்படுவார்களோ என்ற ஏக்கம், வெள்ளை வானில் கடத்தல் நடவடிக்கை, வீதிக்கு வீதி, சந்திக்கு சந்தி தமிழன் சுட்டு வீழ்த்தப்படும் அவலம் -

பால்வேறுபாடின்றி சிறுவர்,பெரியவர் என்ற வித்தியாசமின்றி அல்லைப்பிட்டியில் இளம் குடும்பம் சுட்டுக் கொல்லப்பட்டமை, ஆள்கடத்தல்கள், கொலைகள் இவையெல்லாம் யாழ்.மண்ணில் சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கும்போது யாழ். மாவட்டத்தில் இருக்கும் மனிதநேய அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் இவைகளின் செயற்பாடுதான் என்ன?

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். கடற்றொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டால் எப்படியான நிலை ஏற்படும் என்பதை அன்று ஒரு தடவை நிரூபித்தோம். மறுமுறையும் அப்படி ஒரு நிலை ஏற்பட வாய்ப்புக்கள் அளிக்கவேண்டாம். எமது மக்கள் நிம்மதியாக வாழ வழி நிலையை ஏற்படுத்துங்கள். உங்களால் ஏற்படுத்தமுடியாத விடத்து எமது மக்கள் வன்னி மண்ணுக்கு தொழில் உபகரணங்களுடன் செல்ல அனுமதியைக் கொடுங்கள் என்றும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. இந்த மகஜர்களின் பிரதிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு,மனித உரிமை ஆணைக்குழு,செஞ்சிலுவைச் சர்வதேச சங்கம்,கிளிநொச்சி சமாதானச் செயலகம், பத்திரிகை நிறுவனங்கள், பருத்தித்துறைப் பிரதேச செயலகம் என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த 120 குடும்பங்கள் யாழ். தேவாலயங்களில்

## பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உணவு வசதிகள்

யாழ்ப்பாணம்,மே22

பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் 120 குடும்பங்கள் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் தேவாலயம் மற்றும் யாழ். அடைக்கல அன்னை தேவாலயம் ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன.

38 குடும்பங்களைச் சேர்ந்த 160 பேர் நீக்கிலஸ் ஆலயத்திலும் -

82 குடும்பங்களைச் சேர்ந்த 343 பேர் அடைக்கல அன்னை ஆலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளை யாழ். பிரதேச செயலகம் செய்துவருகின்றது.

இதற்கிடையில் - இவ்வாறு இடம்பெயர்ந்து தேவாலயங்களின் தங்கியுள்ள மக்களை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலர் உட்படப் பலர் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை -

படைத்தரப்பினரும் மக்கள் தங்கியுள்ள இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடியதாக அறியப்படுகின்றது.

# அம்பாறையில் மினிச் சூறாவளி தம்பிலுவில் 80 வீடுகள் சேதம்

ஆலையடிவேம்பு,மே 22

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை மாலை பலத்த காற்றுடன் அடைமழை பெய்துள்ளது. இதனால் திருக்கோயில் பிரதேசத்திலுள்ள தம்பிலுவில் இரண்டாம் பிரிவின் மேற்குப் பகுதியின் 80 வீடுகள் சேத மடைந்தன.

அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழைத்தோட்டங்கள் முற்றாக அழிந்தன. அம்மன் நிலக்குடிப் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களிலிருந்த குடும்பங்களின் தற்காலிகக் குடிசைகள் பெருமளவு சேதமடைந்ததுடன் பலர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் எங்கும் போகமுடியாத 20 குடும்பங்கள் திருக்கோயில் குமரன் வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளன. இவர்கள் திருக்கோயில் கடற்கரைப்பகுதியில் வாழ்ந்து வந்தவர்கள். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கூடாரம், தகரக் கொட்டில்களில் குடியிருந்தவர்கள் ஆவர்.

இதேவேளை, மின்னல் தாக்கியத்தில் பாதிக்கப்பட்ட தம்பிலுவைச் சேர்ந்த 22 வயதான பல்கலைக்கழக மாணவன் சசிறுபன் திருக்கோயில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் நடைபெற்ற பகுதிகளை திருக்கோயில் பிரதேச செயலாளர் எஸ். அழகரெத்தினம் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்களுடன் சென்று பார்வையிட்டு தனது அறிக்கைகளை அரச அதிபரிடம் சமர்ப்பித்துள்ளார். (க)

# அநாமதேய தொலைபேசி அழைப்பால் அனுராதபுரத்தில் அல்லோலகல்லோலம்

அனுராதபுரம் நகரப்பகுதிப் பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்தப்படவிருப்பதாகப் பெற்றார் ஒருவருக்கு வந்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பால் அங்குள்ள பாடசாலைகளில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டதால் பாடசாலைகள் நேரகாலத்துடன் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

காலை பத்துமணியளவில் இத்தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. இந்தக் கதை ஊரெங்கும் பரவியதால் பதற்றமடைந்து பெற்றோர் பாடசாலைகளை நோக்கி அணிதிரண்டு வந்து தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

இதனால், பாடசாலைகளைப் பதினொரு மணிக்கே மூடவேண்டியேற்பட்டது.

எனினும், நகரப் பாடசாலைகளினருகே பாதுகாப்புக்காகப் பொலிஸார் உடன் நிறுத்தப்பட்டனர். நகரப் பகுதியில் பதற்றநிலை உருவானதால் வாகனப்போக்குவரத்தும் சன நடமாட்டமும் குறைந்தே காணப்பட்டது.

## மதிப்பீட்டு பரீட்சை ஒத்திவைப்பு

தென்மராட்சி,மே22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு கடந்த 16 ஆம் திகதி நடத்தப்படவிருந்த மதிப்பீட்டுப் பரீட்சை விடுமுறையின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பித்தவுடன் நடத்தப்படும் என வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இப்பரீட்சை நடத்தப்படவிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (117)

## ஓய்வுபெற்ற மகாசிவத்துக்கு மாகாண கல்வி அமைச்சில் செயற்றிட்ட இணைப்பாளர் பதவி

அச்சுவேலி,மே22

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயற்றிட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அதிபர்சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த த.மகாசிவம் கடந்த 8ஆம் திகதி அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார்.

இந்தநிலையில், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் வடக்கு - கிழக்கு ஆளுநரின் சிபார்சின் பெயரில் மாகாண அமைச்சின் செயற்திட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், கடந்த 19ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (11)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

அச்சுவேலி,மே22

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்திற்கு பொதுச் செயலாளரைத் தெரிவுசெய்தல், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம், தொண்டர் ஆசிரியர் நியமனம் மற்றும் ஆசிரியர், அதிபர்களின் புதிய சம்பளத்திட்டம் என்பன தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்று சங்கத்தின் தலைவர் எஸ்.இராஜநாதன் தெரிவித்தார். (11)

# கொழும்பு மாநகரசபையில் 52 பேரில் 11 பேர் தமிழர்

கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மொத்தம் 52 உறுப்பினர்களில் பதினொரு தமிழர்களும் இடம் பெற்றிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் ஐந்து பேர்களான கோமதி சுப்பையா, எம். ஜி.ஆர்., குருநாதன், ஆரியரட்ன சந்தியாகுபிள்ளை, கொஸ்தா ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

மேலக மக்கள் முன்னணியில் போட்டியிட்டவர்களில் முதன்மை வேட்பாளர் கலாநிதி என். குமரகுருபரன், தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன், கவிஞர் வேலணை வேணியன், கார்த்திகேயன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்ட கே.ரி. குருசாமி, திருக்கேஸ் செல்லச்சாமி ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

மேலக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள பிரபா கணேசன் மேல் மாகாண சபை உறுப்பினராகப் பதவி வகிப்பதால் மாநகரசபை உறுப்பினர் பதவியை ஏற்கமுன்னர் ராஜினாமாச் செய்து கட்சியின் இதர உறுப்பினரொருவருக்கு விட்டுக்கொடுப்பாராரெனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த மாநகரசபை உறுப்பினர் பதவிக்கு மேலக மக்கள் முன்னணியின் பட்டியலில் அடுத்த நிலையில் இருக்கும் ராஜேந்திரன் தெரிவுசெய்யப்படுவார் எனக் கட்சி வட்டாரங்கள் கூறின.

## கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு இன்று

இலக்கியம் மற்றும் கலை கலாசாரங்களில் சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக வருடாந்தம் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருது வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2மணிக்கு கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வோர் மன்னாரில் கடற்படை தடுத்துவைப்பு

இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வோரை மன்னாரில் கடற்படை தடுத்துள்ளது. நேற்று முன்தினம் கடலில் படகொன்று கவிழ்ந்ததில் திருகோணமலையைச் சேர்ந்த பத்து பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே கடற்படை இந்தக் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலையிலிருந்து பெருமளவான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து இந்தியா செல்வதற்காக மன்னாருக்கு வருகை தந்தவண்ணமுள்ளனர். இவ்வாறு வந்த மக்களில் 197 பேர் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்திலும், 35 பேர் தலைமன்னார் தேவாலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பெருமளவு மக்கள் மன்னாரில் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என அறியமுடிகிறது.

இவர்களுக்கான உடனடி உணவு மற்றும் உலர் உணவு வகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மன்னார் பிரதேச சபைச் செயலர் ஸ்ரான்லி டி. நிமல் தெரிவித்தார்.

இம்மக்கள் தங்கியுள்ள இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகப் பிரதிநிதிகளும் மன்னார் ஆயரும் உரிய நடவடிக்கைகளையெடுக்க உறுதியளித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)



தீவகப் படுகொலைகளை அடுத்து இடம்பெயர்ந்து நேற்றுமுன்தினம் வன்னி சென்ற அல்லைப்பிட்டி மக்களுக்கு கிளிநொச்சியில் உணவு வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## அமெ. வழிநடத்தலில் ஐரோப்பிய ஒன்றியம்

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' - என்பார்கள். அதுபோல, இலங்கை விவகாரத்தில் பொருத்தமற்ற நேரத்தில், தேவையற்ற முடிவை எடுத்து, நிலைமையைக் குழப்பியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடு, சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியின் வேலை போலாகியிருக்கின்றது.

தடுமாறிக் கொண்டிருந்த அமைதி முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - முற்றாகத் தடம் புரள வைக்குமாற்போல அமைந்திருக்கிறது ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அதிரடி நடவடிக்கை.

சர்வதேச பொலீஸ்காரனான அமெரிக்காவின் கைங்கரியத்தில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கை, அமெரிக்கா தலைமையிலான வல்லாதிக்க சக்திகள் இவ்விடயத்தில் எதிர்பார்க்கும் பெறுபேறுகளுக்கு மாறானவற்றை - எதிர்மறை விளைவுகளை - தரப் போகின்றன என்பதுதான் உண்மை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சரவை எதிர்வரும் 29 ஆம் திகதி கூடும்போதுதான், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யுமா என்பது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும். என்றாலும், இவ்விடயத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் சில தினங்களுக்கு முன்னர் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் சில விடயங்களை எமக்குச் சொல்லாமல் சொல்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

''யுத்தத்தை - வன்முறையை - நிறுத்துங்கள்; அமைதிப் பேச்சுக்குக் காலதாமதமின்றிச் செல்லுங்கள்; சிறுவர்களைப் படைக்குச் சேர்க்காதீர்கள்!'' - என்றெல்லாம் அந்தப் பிரேரணை பொதுவாகத் தமிழர் தரப்பை - புலிகளை - வற்புறுத்தியிருக்குமானால் அது வேறு விடயம். தனித்தனி நாடுகளில் அமைதியும், சமாதானமும் நிலவுவது உலக - சர்வதேச - அமைதிக்கு முக்கியமானது, அவசியமானது என்ற அடிப்படையில் விடுக்கப்பட்ட வற்புறுத்தலாகவும், வலியுறுத்தலாகவும் அதைக் கொள்ள முடியும்.

ஆனால், இவை எல்லாவற்றையும் தாண்டி, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தனது எல்லைகளை மீறி, தலையீடு செய்யும் விதத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம். அதுவே தமிழர் தரப்பை பெரும் விசனத்துக்குள்ளும், எரிச்சலுக்குள்ளும், ஆதங்கத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது என்பதும் அவதானிக்கத்தக்கது.

* இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்க முடியாது.
* பிற தரப்புக்களையும் - இன, மொழிக் குழுமங்களையும் - தரப்புகளாக ஏற்றுக் கொள்ளப் புலிகள் தயாராக வேண்டும்.
* ஆயுதக் களைவுக்குப் புலிகள் தயாராக இருக்க வேண்டும்.

- இப்படியெல்லாம் கட்டுப்பாடுகளையும், மட்டுப்படுத்தல்களையும் விதிக்கும் உத்தரவாக ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் அமைந்தமைதான் தமிழரின் வியப்புக்குரியது; அவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்துவது.

இவ்வாறு தனது முடிவைத் திணிக்கும் ஒன்றாக ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் அமைந்தமையே அதன் பின்புலத்தில் அமெரிக்கா என்ற வல்லாதிக்கம் இருப்பதை ருசுப்படுத்தப் போதுமானதாகும்.

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள் அல்லர் என்றும் -

மற்றைய தரப்புகளையும் புலிகள் பேச்சில் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் எனவும் -

புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் -

கூறுவதற்கான உரிமையை - அருகதையை - ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கியவர்கள் யார்?

தமிழர்களுடைய இனப் போராட்டத்துக்கான இன்றைய - அடிப்படை - வலுவே அவர்களது ஆயுதங்களும் அவற்றைத் தாங்கி நிற்கும் போராளிகளுமே. இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்று எட்டப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுவது உறுதியாவதற்கு முன்னரே புலிகளின் ஆயுதங்களைக் களையக் கோருவதோ - அதனை நிர்ப்பந்திப்பதோ - பொருத்தமேயற்றது; நடைமுறைச் சாத்தியமே அற்றது. அத்தகைய முடிவு எதற்கும் தமிழர்கள் தலை சாய்க்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஐரோப்பிய ஒன்றித்தின் இந்த உத்தேசத் தடை நடைமுறைக்கு வருமானால், சர்வதேச சமூகத்திலிருந்து தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான புலிகளும் - ஏன் தமிழர்களும் கூட - தனிமைப் படுத்தப்பட்டு, விலக்கப்பட்டு, புறமொதுக்கப்படும் சூழ்நிலை உருவாவதும் தவிர்க்க முடியாததாகும்.

சர்வதேச சமூகத்தின் கீழ் நடக்கும் தற்போதைய அமைதி முயற்சிகளின் மூலம் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நப்பாசையிலேயே புலிகள் யுத்தத்தை நிறுத்தி, இலங்கை அரசோடு பேச்சு முயற்சியில் ஈடுபட இணங்கினர்.

ஆனால், சர்வதேச சமூகத்தின் முக்கிய தேசங்கள் - ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - புலிகளை, தமிழர்களின் பாதுகாப்பு சக்தியை, பயங்கரவாத முத்திரை குத்தி, ஒதுக்குமானால் - புலிகளைக் கைவிட்டுத் தனிமைப் படுத்துமானால் - தங்களது முழு ஆயுத பலத்துடன் கூடிய யுத்தத்தை முழு அளவில் முன்னெடுப்பதைத் தவிர புலிகள் தரப்புக்கு வேறு மார்க்கமே இல்லாமல் போகும்.

இந்த வகையில் அமைதிக்கு வேட்டு வைக்கும் 'அமெரிக்க முஸ்தீபுபோல' ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் வெளிவந்திருக்கின்றது. அவ்வளவே.

# குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து யாழ். வந்த கொழும்பு ஆயரிடம் எடுத்துரைப்பு

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழு கொழும்பு ஆயர் அதிவண. டுலிப் டி சிகாராவிடம் விரிவாக எடுத்துக்கூறி கொழும்பு ஆயரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குச் சம்மதம் தெரிவித்த அதிவண. டுலிப் டி சிகாரா இது தொடர்பான சந்திப்பு ஒன்றை ஒழுங்குசெய்துள்ளது.


கொழும்பு ஆயருடனான சந்திப்பில் தூதுக் குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் உரை நிகழ்த்துகிறார்.

இது தொடர்பான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

தூதுக்குழுவின் தலைவர் டி.ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, வண.பிதா ஏ.பி. செல்வராஜா அடிகளார், வண.பிதா ஜே.நிக்கலஸ் அடிகளார், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மனிதநேய அமைப்புகளைச் சேர்ந்த எஸ். பரமநாதன், வண.பிதா கதிர்காமர், வண. பிதா எஸ்.நேசகுமார் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ். குடாநாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து மக்கள் அனுபவித்துவரும் நெருக்குவாரங்கள், இன்னல்கள் குறித்தும் -

அல்லைப்பிட்டியில் அண்மையில் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் குறித்தும் எடுத்துக்கூறிய இந்தத் தூதுக்குழுவினர் -

இதனை ஜனாதிபதி மற்றும் கொழும்பில் உள்ள முக்கிய பிரமுகர்களின் கவனத்துக்கு கொண்டுவருவதுடன், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருடன் குடாநாட்டு நிலைவரம் குறித்து கலந்தாலோசிப்பதற்கும் அவரது கவனத்துக்கு கொண்டு வருவதற்குமான சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தித்தருமாறும் -

தருவதாக உறுதிமொழி வழங்கினார் என்றும் - சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் தலைவர் டி. ஆர்.அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தனதுரையில்:- -

இலங்கை அரசியல் அமைப்பில் தமிழ்மக்கள் மற்றும் தமிழ்மொழி தொடர்பாக உள்ள சரத்துக்களை அரசு நேர்மையாக அமுல்படுத்தினால், தமிழ் மக்கள் மீதான இன்று ஏற்பட்டுள்ள பயங்கரம் அகன்று நாட்டில் சமாதானம் ஏற்படும் எனவும் -

இதனை அமுல்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் என்றும் - குறிப்பிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (51)

## பாதுகாப்புச் செயலர் மீது போர்க்குற்ற வழக்கு: அமெரிக்காவில் தொடர தமிழ் அமைப்புகள் முஸ்தீபு

கொழும்பு,மே22

இலங்கை அரசின் பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ மீது போர்க்குற்ற வழக்கொன்றைத் தொடர்வதற்கு அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புகள் ஆலோசித்துவருவதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க பிரஜையாகவிருப்பதால் அவர் மீது இந்த வழக்கை அமெரிக்காவில் தாக்கல் செய்வது வசதியாக இருக்குமென்று கருதப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் பத்து வருடங்களுக்கு மேல் வசித்துவிட்டு அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டதின் பின்னர் இலங்கைக்குத் திரும்பினார்.

கிழக்கு மாகாணத்தில் சாம்பூர் பகுதியில் விமானக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு மக்கள் பலர் கொல்லப்பட்டதற்கும் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்தமைக்கும் இவரே காரணமாக இருந்துள்ளார் என்ற குற்றச்சாட்டின்மீது இந்த வழக்குத் தாக்கலாகும் என்று தெரிகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுமக்கள் மீத தாக்குதல்களை நடத்தும்படி துணை இராணுவப்படைகளைத் தூண்டிவிட்டும் உதவி புரிந்து வருகிறார் என்றும் வழக்கில் தெரிவிக்கப்படும் என்று கூறப்படுகின்றது - இவ்வாறு அச்செய்தி கூறுகின்றது. (ப)

## ஜோன்.பொஸ்கோ வித்தியாலய தரம் 5 மாணவர்களுக்கு!

குருநகர்,மே22

யாழ். புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவ, மாணவியர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன என்று அதிபர் அருட்சகோதரி எம். ஜீவந்தி தெரிவித்தார்.

மேற்படி வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பு கடந்த சனிக்கிழமை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை வகுப்புகள் நடைபெறும் என்றும் -

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு வகுப்பு நடைபெறும் வேளைகளில் அங்கு பிரசன்னமாக இருந்து பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (51)

## இணைத் தலைமை மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளும் சாத்தியமில்லை

கொழும்பு,மே22

இம்மாதம் 30ஆம் திகதி ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வது சாத்தியமில்லையென்று தெரியவருகின்றது.

இந்தியாவுக்கு மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ளும்படி முறையான அழைப்புவிடுக்கப்படாமை ஒரு புறமிருக்க, இலங்கையில் எழுந்துள்ள மனித உரிமை சூழ்நிலைகள் காரணமாக அந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் மனோநிலையில் இந்தியா தற்போது இருக்கவில்லையென்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டில் பார்வையாளர் நாடாகக் கலந்துகொள்ளும்படி இந்தியா அழைக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதன் பிறகு புதுடில்லிக்கு விஜயம் செய்து இலங்கையில் தாம் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளின் விவரங்களை இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதேபோல் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பிரதான பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் காம் பும் புதுடில்லியில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கை நிலைமைகள் பற்றி ஆராய்ந்திருந்தார். இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினைகள் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ப)

### புலிகள் மீதான தடை நடைமுறைக்கு வந்தால்

## கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு பெரும் இடையூறுகளுக்குள்ளாகும்

கொழும்பு,மே22

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருக்கும் செயற்பாடு அமுலுக்கு வரும் பட்சத்தில் இலங்கையில் செயற்பட்டுவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் பெரும் இடையூறுகளைச் சந்திக்கநேரும் என்று கூறப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை இம் மாதம் 30ஆம் திகதி அளவில் நடைமுறைக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் சுவீடன், பின்லாந்து, டென்மார்க்,நோர்வே மற்றும் ஐஸ்லாந்து நாடுகளின் பிரஜைகள் உறுப்பினர்களாக இருந்துவருகிறார்கள். கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர். சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகியவை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளாகும். புலிகள் மீதான தடை நடைமுறைக்கு வருமானால் இந்த நாடுகளின் பிரஜைகள் சட்டபூர்வமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான எதுவித நடவடிக்கையிலும் இறங்கமுடியாது என்பதுடன், புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலும் செயற்படமுடியாது என்று கருதப்படுகின்றது. (ப)

## நாளை

வைகாசி - 09
செவ்வாய்க்கிழமை
23.05.2006
திதி : ஏகாதசி
பிற்பகல் : 06.09
நட்சத்திரம் : உத்தரட்டாதி
நண்பகல் : 12.00
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 02.52 - 04.22

## உதயவாக்கு

தூய்மை, பொறுமை, விடா முயற்சி இம்மூன்றும் வெற்றிக்கு அவசியமானவைகள் இவைகளுக்கெல்லாம் மேலானது அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா ஓராண்டு நினைவலைகள்



## திருமதி
# ஏகாம்பரம் அன்னப்பிள்ளை
(மணி)

தோற்றம்: 19.01.1943 — 01.06.2005: மறைவு

திதி: தசமி (22.05.2006)

அன்புடனும் பண்புடனும் அகிலத்தில் வாழ்ந்து
ஆதரவாய் அரவணைத்து அன்பு மொழிபேசி
இன்ப வாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துவிட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப்
பிரார்த்தித்து வேண்டிநிற்கின்றோம்..

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'லிங்கம் களஞ்சியம்'
இல.246, வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

(50327) (24-16-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் உண்மையிலே பயங்கரவாதிகளாக மாறினால் இலங்கைத் தீவே சுடுகாடாகும்



*கிளிநொச்சியில் நீதித்துறை செயற்பாட்டாளர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நீதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி நீண்ட உரை ஒன்றை ஆற்றினார். அந்த உரையின் ஒரு பகுதி நேற்றைய தினம் பிரசுரமாகியது. இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.*

46.2 விழுக்காடு முஸ்லிம்கள் பெருகியிருக்கிறார்கள். ஆனால் தமிழர்களோ...........

எங்களது இனம் சிறுபான்மைப்பட்டமைக்கு இதுவும் காரணம்.

சிங்களம் செய்த சதிகளால் இந்த மண்ணில சிறுபான்மையினராக தமிழர்கள் ஆக்கப்பட்டு விட்டனர்.

துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் போர் நடந்த பின்னால் லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

அன்றைக்கு அது இரண்டு லட்சமெனில் இன்றைக்கு அது பல லட்சமாக இருந்திருக்கும்.

இப்படித் தமிழர்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே உள்ள இந்த முரண்பாடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

ஆயிரமாயிரமாண்டு காலமாக இருந்து வரும் முரண். அவர்கள் எம்மை அழித்துவிட வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால், நாம் அவர்களை அழிக்கவேண்டும் என்று கருதவில்லை.

அவர்களும் நாங்களும் இந்த மண்ணில் வாழ வேண்டும் என்று தமிழர் கருதுகின்றனர். அவர்களோ சிங்களவர் மட்டுமே வாழ வேண்டும் என்கின்றனர்.

அவர்கள் சொல்வது போல் வந்தேறு குடிகள் வெளியேற வேண்டுமேயானால் முதலில் சிங்களவர்கள்தான் வெளியேற வேண்டும். நாங்கள் ஒன்றும் இந்த மண்ணின் வந்தேறிகள் அல்ல.

இந்த உலகில் குமரிக் கண்டனம் என்று ஒன்று இருந்தது. அதனது வடக்கெல்லை இமயம். மேற்கு எல்லை ஆபிரிக்கா. தெற்கெல்லை அண்டார்ட்டிக். தென்கிழக்கு எல்லை ஆஸ்திரேலியா. கிழக்கு எல்லை கிழக்கிந்தியத் தீவுகள்.

இதற்கிடையே ஒரு பெருந்தேசம் இருந்தது. கடல்கோளிலே இந்த தேசம் அழிந்து போயிற்று.

இதில் எஞ்சியிருப்பது இந்தியாவும் இலங்கையும் ஆபிரிக்காவின் மடகஸ்கார் தீவும் தான். இந்த மண்ணிலே தோன்றிய மக்கள் நாங்கள். எங்களுக்கே உரியது இந்த மண்.

வந்தேறுகுடிகள் வெளியேற வேண்டுமானால் சிங்களவர்கள் வெளியேற வேண்டும்.

உலகின் பல பகுதிகளிலும் வந்தேறி குடிகள்தான் வெளியேற வேண்டும்.

**இந்தியா தமிழருடைய நாடு**

3,500 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரியர்கள் குடியேறினார்கள். அங்கிருந்து அவர்கள் வெளியேற வேண்டும்.

அமெரிக்கா செவ்விந்தியர் நாடு. அங்கிருந்து வெள்ளைக்காரர்கள் வெளியேறிச் செல்ல வெண்டும்.

ஆஸ்திரேலியா அல்பேர்ஜினியர்களின் நாடு. அங்கிருந்து வெள்ளைக்காரர்கள் வெளியேற வேண்டும்.

இப்படியெல்லாம் கூறினால் நடக்கப் போவதும் இல்லை- வாய்ப்பும் இல்லை-

அந்த அந்த மண்ணில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒன்றிணைந்து வாழ்ந்தவர்களை உள்ளே போ வெளியே வா என்று சொல்வது மூடச் செயல். சிங்களவர்களுக்கு இது புரியாது. அவர்களுடைய இனவாதம் எல்லாவற்றையும் மறைத்துவிடுகிறது.

இந்த மண்ணுக்குரிய நாங்கள் எங்கேயும் போக வேண்டியதில்லை. எங்கள் மண்ணில எங்கள் இருப்பைக் காப்பாற்ற நாம் போராட வேண்டும்.

இலங்கை விடுதலை அடைகிற போது நீர்கொழும்பில் 53 தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. இன்றைக்கு ஒரே ஒரு பள்ளிக்கூடம் மட்டுமே இருக்கிறது. மற்ற பள்ளிக்கூடங்கள் எல்லாம் சிங்களப் பள்ளிக்கூடங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

தமிழ் மூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களை அந்தப் பள்ளிகளுக்கு நியமிக்காமல் நிறுத்தி சிங்கள ஆசிரியர்களை அமர்த்தினார்கள். சிங்கள மொழியிலே கல்வி கற்பித்து படிப படியாக அங்கே எங்கள் இனமே இல்லாமல் முற்றாக அழித்தொழித்திருக்கிறார்கள்.

நீர்கொழும்பில் இன்றைக்கு சிங்களவர் என்று சொல்லிக் கொண்டு வாழ்கிறவர்கள் யாரென்றால் இலங்கை விடுதலையடைவதற்கு முன்பு தமிழர்களாக இருந்தவர்கள் தான்.

நீர்கொழும்பில் மட்டுமல்ல. சிலாபத்திலும் தெற்குப் பகுதியிலும் வாழ்ந்த தமிழர்களும் இவ்வாறு மாற்றப்பட்டவர்களே.

ஓர் இனத்தினது பயிற்று மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்து போகும்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து பீஜி, மொரீசியஸ், தென்னாபிரிக்கா என்று பல்வேறு நாடுகளுக்கும் தமிழர்கள் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

இன்றைக்கு அங்கே வாழ்கிற அவர்கள் யாருக்குமே தமிழ் தெரியாது. அவர்கள் இன மாற்றம் அடைந்து விட்டனர்.

ஏன் உங்களுடைய உறவினர்கள் இன்றைக்கு வெளிநாடுகளில் வாழ்கிறார்களே- அவர்களில் எத்தனை பேருக்குத் தமிழ் தெரியும்?

இங்கிருந்து போனவர்கள் மட்டும் தமிழ் பேசுகின்றனர். 4 வயதில் போனவர்கள் கூட தமிழை மறந்துவிட்டனர். ஏனென்றால் தமிழைப் படிக்கக் கூடிய வாய்ப்பு இல்லை.

மொழி என்பது ஓர் இனத்தினது அடையாளம் - உயிர். அது இல்லாது போனால் அந்த இனம் தனது அடையாளத்தை இழந்து விடும்.

கனடாவில் 3.5 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். ஆனால், மூவாயிரம் பிள்ளைகள்தான் தமிழைப் படிக்கிறார்கள். அப்படியானால் அங்கே உள்ள நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தங்கள் இனத்தின் அடையாளத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதுகிற பெற்றோர், தங்கள் பிள்ளைகள் தமிழில் கற்க வேண்டும் என்கிற பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டிலே தமிழைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதைப் பொருட்படுத்தாதவர்கள் விட்டுவிட்டார்கள்.

பெற்றோருக்கு அந்த நாட்டு மொழி தெரியாததால் பெற்றாருடன் பிள்ளைகள் தமிழில் கதைக்க வேண்டியிருக்கிறது. எழுதவோ படிக்கவோ அவர்களுக்குத் தெரியாத நிலையும் உள்ளது.

இந்த நிலைமை தொடருமானால் வெளிநாட்டுக்குப் போன தமிழர்கள் இனமாற்றம் அடைந்து விடுவார்கள்.

தமிழீழத்தில் எங்கள் எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் வெளியே சென்றுவிட்டனர். அவர்களில் மிகக்குறைந்த எண்ணிக்கையே இங்கே திரும்பி வருவர்.

தமிழ் மறந்து போன தமிழ்ச் சிறார் இங்கே வரப்போவதில்லலை. அடுத்த தலைமுறை வருமா என்பதும் உறுதியில்லை.

இந்த மண் விரைந்து விடுதலையடைந்தால் அவர்கள் வரலாம். இந்த விடுதலைப் போராட்டம் தொடர்ந்தும் 30 ஆண்டுகள் இழுபட்டால் வாய்ப்பு மிக மிகக் குறைவு.

மொழி அழியவும் அழிக்கப்படவும் கூடியது. அதைத்தான் சிங்கள அரசாங்கம் இங்கே செய்து கொண்டிருக்கிறது.

நீர்கொழும்பிலும் சிலாபத்திலும் செய்ததை மலையகத்திலும் செய்ய முயற்சிக்கின்றனர். மலையகத்தில தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதை நிறுத்திவிட்டு சிங்கள ஆசிரியர்களை நியமிக்கிறார்கள்.

அச்சத்தின் காரணமாக மலையகத்தில் சிலர் தங்களது பெயரை சிங்களப் பெயராக மாற்றிக் கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலும் கூட தமிழர்கள் முஸ்லிம்களாகவும் சிங்களவர்களாவும் தங்களை மாற்றிக்கொள்ள முனைந்திருப்பதை அறிந்தபோது மிகவும் துயரப்பட்டேன்.

இன மாற்ற நடவடிக்கைக்குப் புறம்பாக வன்முறைகள் மூலமாக இந்த மண்ணில் காலத்துக்குக் காலம் தமிழர்கள் எப்படியெல்லாம் கொல்லப்படிருக்கிறார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

1958, 77, 81, 83 ஆம் ஆண்டுகளில் சிங்கள அரசுக ளின் துணையோடு சிங்கள இனவாதிகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளில் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுத் தமிழினம் அழிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் இனத்தைக் கொல்வதனால் மட்டும் அந்த இனம் அழிக்கப்படுவதில்லை. பொருளாதாரம் - கல்வி- நிலம் பறிக்கப்படுவதூடாகவும் அழிக்கப்படுகிறது.

1891 இல் தென் தமிழீழத்தில் 5,947 சிங்களவர்கள் இருந்தார்கள். 75 ஆயிரம் தமிழர்கள் இருந்தனர். 43 ஆயிரம் முஸ்லிம்கள் இருந்தனர்.

100 ஆண்டுகளுக்குப் பின்னைய புள்ளி விவரப்படி 1981 இல் தென் தமிழீழத்தில் 4 இலட்சத்து 11 ஆயிரம் தமிழர்கள், 2 இலட்சத்து 50 ஆயிரம் சிங்களவர்கள், 3 இலட்சத்து 19 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் சேர்த்தால் தமிழர்கள் சிறுபான்மையாகி விடுவர்.

12 தமிழருக்கு ஒரு சிங்களவர் என்ற நிலை அன்று இருந்தது. இன்றைக்கு ஒரு சிங்களவருக்கு 2 தமிழர் கூட இல்லை என்ற நிலைமை உருவாகியுள்ளது.

இன்றைக்கு வன்முறைகள் எங்கள் மண்ணிலேயே நடக்கிறது. சிங்கள அரசாங்கத்தின் ஒப்புதலோடு இந்தப் படுகொலை நடக்கிறது. இந்தப் படுகொலை வரிசையின் கடைசிதான் அல்லைப்பிட்டிப் படுகொலை.

எங்கள் இனத்தின் விடுதலைக்குப் போராடுவது பயங்கரவாதம் என்று சிறிலங்கா சொல்கிறது. இலங்கையிலிருந்து நன்மை பெற வேண்டிய சில நாடுகள் அதற்கு சங்கு ஊதுகின்றன. அமெரிக்காவிலிருந்து ஓர் அமைச்சர் வந்தாராம். உலகத்திலேயெ இருக்கிற மிகப் பெரிய பயங்கரவாத இயக்கம் விடுதலைப் புலிகள் என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர் - எங்கள் இன விடுதலைக்காகப் போராடுகிறோம்.

சிங்களவர்களும் நாங்களும் இணைந்து வாழ வேண்டும் என்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

சிங்களவர்களுக்கும் உலகத்துக்கும் நாங்கள் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழரை இந்த மண்ணிலிருந்து முற்றாக அழிக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கையை சிங்களவர்கள் மேலும் எடுப்பார்களேயானால் - நாங்கள் பயங்கரவாதிகளாக மாறினால் இலங்கைத் தீவு அழிந்துவிடும் என்பதை சிங்களவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கண்டிப்பாக இலங்கைத் தீவு அழியும்.

தமிழர் இந்த மண்ணில் வாழ முடியாது போனால்- தமிழர்கள் பயங்கரவாதிகளாக மாறினால் இலங்கைத் தீவு அழிந்துபோகும்.

சிறிலங்காவும் அதற்கு வழிபாடு நடத்தும் நாடுகளும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எங்களுக்கு வாழ்வில்லை என்கிற போது கைகட்டி வாய்பொத்திப் பார்த்திருக்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் அழித்துவிட்டு நாங்களும் அழிந்துவிடலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

அப்படியான முடிவை நாங்கள் எடுத்தால் இலங்கைத் தீவு சுடுகாடாக மாறும்.

(வளரும்)

## வன்னேரிக்குளத்துக்கு மின்சாரம் வழங்க உறுதியான செயற்பாடுகள் அமுலில்!

### கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் தகவல்

வன்னேரிக்குளம் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுவதற்கான உறுதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

வன்னேரிக்குளம் மருத்துவமனையில் ஓய்வுபெறும் டாக்டர் ச.முருகானந்தனின் பாராட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது மாவட்டத்தில் 25 ஆண்டுகளாக மருத்துவப் பணி புரிந்த மருத்துவர் ஓய்வு பெறும் போது இந்தப் பாராட்டு விழா நடத்தப்படுவது பாராட்டுக்குரியது.

மருத்துவர் ச.முருகானந்தன் எமது மாவட்டத்தில் மருத்துவப் பணி மட்டும் செய்யவில்லை. இலக்கியப்பணி, சமூகப்பணி என்பனவற்றையும் அவர் செய்துள்ளார்.

ச.முருகானந்தன் 1983 களில் எழுதிய ''வன்னேரி பொன்னேரியாகிறது'' சிறுகதை வன்னேரிக்குளம் மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தியது. வன்னேரிக்குளம் பகுதி 25 வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட இன்று பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

- இந்த நிலையில், தற்போது இந்தத் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எரிபொருள் நெருக்கடி ஏற்படினும் மின்சாரம் வழங்கும் முயற்சி இடம்பெறும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (420)

## கிளிநொச்சியில் நிறுவப்படும் மருத்துவமனை ஜுலை மாதம் முதல் இயங்கத் தொடங்கும்

அக்கராயன்,மே.22

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் பொது மருத்துவமனை எதிர்வரும் ஜுலை மாதத்தில் இயங்கவுள்ளது.

இந்த மருத்துவமனை கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இயங்குமென கிளி நொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதற்கேற்ப பொது மருத்துவமனைக் குரிய கட்டட வேலைகளும் இடம்பெற்றுவந்தன.

ஆனால், கடந்த சில மாதங்களாக நிலவிய பதற்ற நிலையை அடுத்து, பொது மருத்துவமனையின் கட்டடப்பணிகள் பாதிக்கப்பட்டன.

தென்னிலங்கையிலிருந்து கட்டடப் பொருள்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம் கட்டடப் பணியாளர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று திரும்புவதில் ஏற்பட்ட தாமதம் என்பன மேற்படி மாவட்ட பொது மருத்துவமனையின் கட்டடப் பணிகளில் தாமதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கட்டடப் பணிகள் முடிவடைந்ததும் ஜுலை மாதம் தொடக்கம் இந்த பொது மருத்துவமனை இயங்கும் என்று கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார பணிமனையின் முக்கிய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாலயத்தில் மழைகாலத்தில் ஏற்படும் நெருக்கடிக்குத் தீர்வு

### முக்கிய பிரமுகர்கள் ஒன்றுகூடி ஆராய்வு

புதுக்குடியிருப்பு,மே22

புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் மழைகாலத்தில் நீர் தேங்குவதால் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. தற்போது இதற்குத் தீர்வு காணும் வகையில் புதுக்குடியிருப்புப் பிரதேச வடிகால் அமைப்பு திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

பாடசாலையில் மழைகாலங்களில் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கை மற்றும் நீண்டகாலத் திட்டம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 15ஆம் திகதி பாடசாலை அதிபர் சி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.தயாரூபன், பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ். சிவகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் சி.தயானந்தா, மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடர், மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.பார்த்தீபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (353)

## பாண்டியன்குளத்தில் கிராம அபிவிருத்தி செயலகம் திறப்பு

மல்லாவி,மே22

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீளமைப்புத் திட்டத்தின் கீழ் பாண்டியன்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் செயலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

பாண்டியன்குளம் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செயலகத்தின் பெயர்ப்பலகையை மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ம.ஜெகு திரை நீக்கம் செய்துவைத்தார்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் நா.நந்தகுமார் செயலகத்தை நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

28 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கிராம அபிவிருத்திச் செயலகம், முன்பள்ளி, கிராம சேவையாளர் அலுவலகம், பொதுப்பயன்பாட்டு மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கியது. (322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **No.1 Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 22.05.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், ஈரன் - ஆலடி, உடுவில், சந்நிதி பாம் - தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49297)

## தவறிவிட்டது

பொன்னம்பலம் - புஷ்பராணி என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (488310372V), தர்மராசா - புஷ்பராணி என்னும் பெயருடைய விசேட அ.அட்டை (0902030906) என்பன 05.05.2006 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஐங்கரன் களஞ்சியம், பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். **T.P:** 0779059548. (50362)

## மணமகன் தேவை

இந்துகௌரவ குடும்பம், 1978, உத்தராடம், முதலாம் கால், 8இல் செவ்வாய், கிரக பாவம் 74, உயரம் 5'5'' உடைய மணமகளுக்கு வெளிநாடு (**U.K.**, கனடா) மணமகன் தேவை. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ். வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய். **T.P:** 021 4591068. (50369)

இந்துகௌரவ குடும்பம், 1976, சதயம், செவ்வாய்க்குற்றம் இல்லாத கிரகபாவம், 20¾, உயரம் 5'3'', **B.S.ms** பட்டதாரி மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், விரிவுரையாளர் போன்ற மணமகன் தேவை. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ். வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
**T.P:** 021 4591068. (50368)

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி புதிய அதிபர் பதவியேற்பு

மண்டைதீவு,மே22

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி துஸ்யந்தி துசீகரன் நேற்று முன்தினம் வைபவ ரீதியாகத் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் வளாகத்தில் அமைந்துள்ள புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இந்தப் பதவி ஏற்பு வைபவம் நடைபெற்றது.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் குலிப் கமில் சிக்கேராவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தப் பதவி ஏற்பு நிகழ்வில் நகரத்தின் பிரபல பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள், சமயகுரவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (88)

## உடுவில் மகளிர் மாணவர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே22

உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் ஆண்டு 3 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (எ)

## கலாபூஷண நாயகனை வாழ்த்துகிறோம்



இன்று 22.05.2006 கலாபூஷண விருது பெறும் பொன்னாலையைச் சேர்ந்த சங்கீதபூஷணம் **வைர உருத்திரன்** அவர்களை சித்தன்கேணி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அவரது மாணவ, மாணவிகள் அவரது கலை மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றோம்.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி. **மாணவ, மாணவிகள்.** (50380)(24-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாஷையூரைச் சேர்ந்த அண்ணாவியார்
**திரு.அ.பாலதாஸ்** அவர்கள்
இன்று 22.05.2006இல்
கொழும்பு -07 இல் உள்ள ஜோன் டீ.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில்
கலாசார அமைச்சினால்
"கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.
அவர்களை வாழ்த்தி
இறை ஆசி பெறவேண்டுகிறோம்.
**- நண்பர்கள்.**
(50361)(24-11)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 10 - 1948 | மறைவு 05 - 06 - 2002



### அமரர் இராசலிங்கம் அமரசோதி

திதி: 22-05-2006

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாதப்பா உம் துயரம்
என்றும் எங்கள் மனக்கண்முன் நின்று
எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**தாய், மனைவி, பிள்ளைகள்.**

117A, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (50256)(24-11)

## IMMEDIATE VACANCY - Jaffna

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of Organizations from 12 European countries that supports a board portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGO's Arbeiter-Samariter-Bund (ASB), Norwegian People's Aid (NPA), and Swiss Labour Assistance (SAH). Applications are requested from experienced person for the following positions:

**Technical Officer (1)**

Reporting to the Project Manager the TO is responsible for monitoring construction projects. The ideal candidate should have at least five years experience in a technical capacity, be self- motivated and independent, with excellent communication skills. Fluency in English, Tamil & Sinhala essential.

*Duties include*

- Quality control checks on contractors work - ensuring timeframes and progress
- Compilation of weekly reports and timely submission to the Project Manager
- Overall guidance for construction projects

**Administrator (1)**

Reporting to the Project Manager this position is central to the project & will require an IT proficient candidate with a high standard of professionalism, outstanding organizational & communication skills with the ability to liaise with all relevant authorities, partners, stakeholders & communities. Fluent English, Tamil & Sinhala requird.

*Duties will include:*

- Administration, basic accounting, finance and / or book keeping
- Maintenance of files, database
- Office/staff management

**Driver/translator (1)**

- Proven 3-5 years driving experience
- Fluent command of spoken Sinhala, Tamil & English
- Knowledge of geography in place of work
- Valid license

**Period of Contract**

All positions are for 7 months (extendable): Extension will be considered based on performance and the requirement at the time

Cover letter, curriculum vitae and references should be addressed to:
Mr.Christin Justin, Solidar, No.156, Jaffna Road, Paranthan
or by email: christiyustin@gmail.com

Deadline for application is Monday 22nd of May 2006

Norwegian People's Aid ASB Swiss Labour

## இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் முக்கிய அறிவித்தல்

தரம் 5,9,10,11இல் கல்வி கற்கும் மாணவர்களும் சகல ஆசிரியர்களும் நாளை (23-05-2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமுகம் அளிக்கவும். (50379)(26-24-11) **- அதிபர்.**

## மூன்றாம் வருட நினைவஞ்சலி



செல்வி
### துரைராசசிங்கம் துஷாயினி
(துஷா)

தெய்வத் தாயின் மடியில் 13-07-1982 | செல்வக்கந்தன் மலரடியில் 23-05-2003

ஆண்டுகள் மூன்றானாலும் மகளே துஷாயினி
ஆண்டவன் சன்னதி சென்றாய் துணை யாரினி?
மீண்டும் உனதில்லம் வரவேண்டுமென தினம்
வேண்டுதலை வேண்டுகின்றேன்; புலம்புகின்றேன்
நிழல்தந்தாய் அன்று, இன்று நிழல் இன்றிக்
கலங்குகின்றேன் என் மகளே உன் பிரிவால்.

உமது ஆத்மாசந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தகவல்:
ச.துரைராசசிங்கம் (தந்தை)
குடும்பத்தினர்.

நாராயணன் வீதி, (50356)(24-11)
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம் 04 - 06 - 1963 | மறைவு 12 - 06 - 2004



### அமரர் பொன்னு தேவராசா

*திதி: 22-05-2006*

எமது குலவிளக்கு அணைந்து ஈராண்டுகள்
ஓடி மறைந்ததோ உனது உருவம்தான்
எம்மிடம் இல்லை உயிர் எம்மிடமே தந்து
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உம் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

50A,பிறவுண் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம். (50301)(24-11)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை சவுந்தரம்
*(நயினாதீவு)*



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கணபதிப்பிள்ளை சவுந்தரம் 18.05.2006 வியாழக்கிழமையன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (பரம்பரை அறங்காவலர் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்) - நாகரத்தினம் தம்பதியரின் மகளும் கனகசபை - கற்பகம் தம்பதியரின் மருமகளும் -

ரஞ்சிதா (ஆசிரியை - கொ/மத்திய கொழும்பு இந்து வித்தியாலயம்), மஞ்சுளா (யாழ்ப்பாணம்), வசந்தராணி (கொழும்பு) மற்றும் கனடாவில் வசிக்கும் சோதிராசா, சரஸ்வதிதேவி, சரோஜினிதேவி, குலசிங்கம், மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் -

யோகராஜா (ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்), கிருபானந்தசிவம் (ஆசிரியர் - இந்துக் கல்லூரி, உரும்பிராய்) மற்றும் கனடாவில் வசிக்கும் மனோரதி, கிருஷ்ணதாசன், தர்மகுலசிங்கம், ரஜனி, காலஞ்சென்ற சண்முகநாதன், பாஸ்கரன், ஆறுமுகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் -

ஜயகாந் (இலங்கை மத்திய வங்கி), சசிகஜன் (சர்வதேச சந்தைப்படுத்தும் நிறுவனம் - கொழும்பு), நிரோஜ், பகவாணி, பகபிரஷாத், தருஜி, யாமினி, தர்ஷா மற்றும் கனடாவில் வசிக்கும் லதாஜினி, கோபிகாந், கோகுலன், ரம்மியா, மத்யூ, அஜந்தன், அனுஜா, சுஜாந், துஷியந்தன், ஜீவிதன், சபரினா, கபிலன், றேகன், பிரதாஜினி, சுகிர்தா, கிரிஷாந்தி, நதீஷன், சுலக்ஷியா, சன்சிகன், பிரவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் -

கனகசபாபதி (கனடா), பராசக்தி, கமலாம்பிகை, லலிதாம்பாள், பரமலிங்கம், மகாதேவா, நவரத்தினராசா (தென்னாபிரிக்கா) மற்றும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, குகதாஷன், காமாட்சிசுந்தரம், மகாலிங்கம், இராசரெத்தினம், ஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் -

நாகரத்தினம், சரஸ்வதி, சகாதேவன் மற்றும் காலஞ்சென்றவர்களான முருகேஷபிள்ளை, சுப்பிரமணியம், கதிரவேலுப்பிள்ளை, பரராஜசிங்கம் ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2006) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

✱ பிற்பகல் 4 மணியளவில் எமதில்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும். (50374)(24-11)

தகவல்:
கிருபானந்தசிவம் - மஞ்சுளா (மகள்)

37/4, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS இன் மனமார்ந்த வாழ்த்துக்கள்



இன்று க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு IIS இன் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இயக்குநர்
IIS
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831

INSTITUTE OF INFORMATICS STUDIES



Shanida Vasanawa

சீட்டிழுப்பு இல. 1711

20.05.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் — சுப்பர் எண்

14 44 59 60 (13)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301083169 இலிருந்து 301096952

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 73,91,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 73,91,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 351 | 1,000/- | 3,51,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,189 | 500/- | 5,94,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 17,541 | 40/- | 7,01,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,686 | 20/- | 3,33,720/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,48,640 | 10/- | 24,86,400/- |
| மொத்தம் | | | 55,92,260/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,84,438 | | 61,92,260/- |

தொடர் இல. 201177140 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 80,55,900/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 301091517-5-28 |
| மாத்தறை | 301086022-4-53 |
| கம்பஹா | 301090031-8-65 |
| கண்டி | 301087316-6-29 |
| மொனராகலை | 301089361-3-47 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

780 சிவப்பு

கும்பம்

19-05-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5163696-5177823

வெற்றி இலக்கங்கள் 01 12 23 49

ஜக்பொட் பரிசு ரூபா 23,50,750/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 68,17,790/-
தொடர் இல. 4280449 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,00,082 | 10/- | 30,00,820/- |
| 2 இலக்கங்கள் | 27,500 | 20/- | 5,50,000/- |
| 1 இல+லக்கினம் | 27,314 | 30/- | 8,19,420/- |
| 2 இல+லக்கினம் | 2,568 | 100/- | 2,56,800/- |
| 3 இலக்கங்கள் | 727 | 500/- | 3,63,500/- |
| 3 இல+லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 23,50,750/- | - |
| மொத்தம் | | | 57,65,540/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,58,275 | | 68,17,790/- |

இந்த செவ்வாய்க்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 30,21,050/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 5167967-0-23 |
| களுத்துறை | 5170802-7-48 |
| அம்பாறை | 5170224-3-80 |
| நுவரெலியா | 5170315-2-64 |
| புத்தளம் | 5164923-0-62 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03



## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30


## ஒத்துமாறல்

எதிர்வரும் கல்வியாண்டிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டக்கல்விக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒத்துமாறல் தேவையிருப்பின் கீழுள்ள இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

*0244 - 920177 / 0777457029*
(50375) (24-11)

## AAT மாணவர் கவனத்திற்கு

சகல மாணவர்களுக்குமான
அவசர கலந்துரையாடல்
நாளை (23-05-2006)
செவ்வாய்க்கிழமை காலை 9
மணிக்கு இடம்பெறும். இதில்
எதிர்வரும் பரீட்சையில்
தோற்றவுள்ள மாணவர்கள்
அனைவரும் கலந்து
கொள்ளவும்.

நிர்வாகி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு,
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/49349)(26.11)

# மரண அறிவித்தல்

## கந்தசாமி இராசம்மா



காரைநகர், வெடியரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராசம்மா அவர்கள் 20-05-2006 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -ஆச்சிமுத்து தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சீதேவி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கோபாலரத்தினம், பூபாலரத்தினம், நவரத்தினம், மிருகண்டேயர் மற்றும் சபாரத்தினம் (ஆஸ்திரேலியா, தங்க மாளிகை), துரைராசா (கொழும்பு, தங்க மாளிகை), நடேசலிங்கம் (கொழும்பு, தங்க மாளிகை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, சௌந்தரம், சரஸ்வதி, மகாலட்சுமி, கலாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபத்திராதேவி, இராஜேஸ்வரி, இராஜசந்திரன், இராசமலர், திலகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயும் மாணிக்கவாசகர், தர்மலிங்கம், பொற்கலை, பஞ்சநாதன், ஜெயநாராயணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் இரத்தினேஸ்வரி (இராஜேந்திரன்), இரத்தினகுமார் (சாந்தி), கேதீஸ்வரி (தவயோகன்), கோகிலேஸ்வரி, ரஜனி (சிவநாதன்), தர்சினி, காந்தினி, பிரதீபன், கிரிசாந்தினி, யஜுந்தினி, கிரிசாந்தன், நிரஞ்சனி, அருள்ராஜா, துவாரகன், மிதிலா, ஸ்ரீதன்யா (ஆஸ்திரேலியா), மிகிரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் டினிஷா, அன்பா, தனுஷா, டக்ஷா, தீபிகா, சாரங்கன், சாருஜா, சாருஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-05-2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெடியரசன் வீதி,
காரைநகர்.
(50376)(26.11)

தகவல்:
(மகன்).

## உடுவில் மகளிர் கல்லூரி
### அறிவித்தல்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 இல் கல்விகற்கும் மாணவர்கள் கவனத்திற்கு:

மேற்படி வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் நாளை (23.05.2006) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஒன்றுகூடவும்.

அதிபர்.
(சி/49341)(32-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில் 13 - 10 - 1944



ஆண்டவன் அடியில் 22 - 04 - 2006

### திருமதி குலவீரசிங்கம் மகாலெட்சுமி

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் திருவுருவாய்
வாழ்ந்த நீங்கள் பாரை விட்டுப் போனது ஏனோ?
எமை விட்டுப்பிரிந்து விட்ட எம் பாசமலரே
எங்கள் உயிர் மூச்சு உள்ளவரை - நீங்கள்
எங்கள் இதயங்களில் உயிருடன் வாழ்வீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இன்று (22-05-2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இ.பரநிருபசிங்கம்,
இல.44, சீனிவாசம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
-குடும்பத்தினர்.
(50381)(26.11)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் பொன்னம்பலம்



மாணிக்கவளவு, கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (21-05-2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் மயில்வாகனம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் திருமதி பொ.பூபதியின் அன்புக் கணவரும் பொ.மயூரன் (பொறியியளார், லண்டன்), பொ.பார்த்தீபன் (ஆசிரியர், மணற்காடு றோ.க. த.க. பாடசாலை), பொ.பரந்தாமன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜா(லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனும் விதுர்சனின் (லண்டன்) பாசமிகு பேரனும் திருமதி சண்முகலிங்கம் புனிதவதி (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ம.இளங்கோ (உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*மாணிக்கவளவு,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*
*தொ.பே.0779122752* (50382)(26.11)

தகவல்: பொ.பார்த்தீபன்
*(ஆசிரியர்-மகன்).*

## திருமதி சிவபாக்கியம் நாகமுத்து (லண்டன்)

(முன்னாள் அறங்காவலர் காரைக்கூடல் வைரவர் தேவஸ்தானம் புத்தூர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் சிவப்பிட்டி, சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நாகமுத்து 19-05-2006 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கப்பூர் ஓடிற்றர் கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற S.நாகமுத்து அவர்களின் அன்பு மனைவியும், K.நடராசா (லண்டன்), இராஜேஸ்வரி - சந்திரசேகரம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற K.துரைராசா (அங்கிள்) ஆகியோரின் சகோதரியும் Dr.N.ரவீந்திரநாதன் (லண்டன்), N.நரேந்திரநாதன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), Dr.N.கைலைநாதன் (லண்டன்), திருமதி மனோகரி செல்லப்பா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-05-2006) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புத்தூர்.** (50378)(26.11)

தகவல்:
சு.மழவராயர் *(மைத்துனர்).*

## வைத்திய கலாநிதி வி.பி.அமரசிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி வி.பி.அமரசிங்கம் அவர்கள 20-05-2006 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பத்மா அமரசிங்கம் அவர்களின் அன்புக் கணவரும், டீப்தி, ஸ்கந்தா, நிவடிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவி(H.N.B. Area Office Vavuniya), சுதா(Canada), ரமணன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனனி, அஞ்சனா, தீபன், ரெஜி, மகிஷா, தக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களாகிய எஸ்.பி. அமரசிங்கம், விமலா ஆறுமுகம் மற்றும் அழகேசன், திருமதி சாந்தி மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலா மண்டலேஸ்வரன் மற்றும் சரா தாமோதரம், மீனா மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.65 A, ஹோனா றோட், கல்கிஸ்ஸயிலிருந்து இன்று (22-05-2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிஸ்ஸ பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்கிஸ்ஸ.**
**தொ.பே.011 2738407** (50)(26

தகவல்:
R.ரவி *(மருமகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் கையில் வதைபட்டுச் சாவதைவிட கடலில் படகு கவிழ்ந்து சாவது மேலானது

## தமிழகம் சென்றடைந்த ஈழத் தமிழ் அகதி தெரிவிப்பு

இராமேஸ்வரம், மே 22

''இலங்கையில் சிங்களவர்களின் கையில் வதைபட்டுச் சாவதைவிட கடலில் படகு கவிழ்ந்து சாவது எவ்வளவோ மேல்''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழ் அகதி ஒருவர். இலங்கையிலிருந்து பதினாறு குடும்பங்களைச் சேர்ந்த 69 அகதிகள் மூன்று படகுகளில் நேற்றுத் தமிழ்நாடு அரிச்சமுனை கடற்கரையில் வந்திறங்கினர்.

விசாரணையின் பின்னர் மண்டபம் அகதி முகாமை வந்தடைந்த இந்த அகதிகளிடம், ஏற்கனவே அகதிகளாகப் புறப்பட்ட பலர் கடலில் மூழ்கிப் பலியான சம்பவம் குறித்துச் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அப்போதே அகதியொருவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இராமேஸ்வரம் கடலில் படகு கவிழ்ந்த சம்பவம் இங்கு வந்த பிறகுதான் எங்களுக்குத் தெரியும். இலங்கையில் சிங்களவர்களின் கையில் வதைபட்டுச் சாவதைவிட இது எவ்வளவோ மேல் என்று எண்ணுகிறோம்.

எங்களைத் தீர்த்துக்கட்டவேண்டும் என்று சிங்களவர்கள் கங்கணம் கட்டி வன்முறையில் ஈடுபடுகின்றார்கள். வீதிகளில் நடமாட முடியவில்லை. வீடுகளில் தங்கமுடிவதில்லை. எந்த நேரம், என்ன நடக்குமோ என்ற பீதியுடனேயே வாழ்கிறோம்.

குழந்தைகள் மற்றும் இளம் பெண்களின் பாதுகாப்புக்காகத் தமிழ்க் குடும்பங்கள் பலவும் வீடுகளைப் பூட்டிவிட்டு இலங்கைக் கடலோரப் பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். மரங்களின் மீதும், புதர்களுக்கிடையிலும் பலர் குடும்பம் குடும்பமாகப் பதுங்கி இருக்கிறார்கள்.

அவர்கள் அனைவரும் அங்கிருந்து இராமேஸ்வரம் வரக் காத்திருக்கிறார்கள். பணத்துக்கும், படகுக்கும் வழி இல்லாததால் பரிதாபத்துடன் ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள். பணமும், படகும் கிடைத்ததும் அவர்கள் இங்கு அகதிகளாக வருவார்கள். காட்டுக்குள் குழந்தைகளுடன் அவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. நினைத்தாலே நெஞ்சம் கனக்கிறது.

- இவ்வாறு அவர் அழுதுகொண்டே கூறினார்.

நேற்று வந்த அகதிகள் கொடுத்த இந்தத் தகவலின்படி இராமேஸ்வரத்திற்கு வரும் அகதிகள் எண்ணிக்கை எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும் என்று மண்டபம் அகதிகள் முகாமின் அதிகாரிகள் கருதுகிறார்கள். (க)

# தம்பலகாமத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 22

திருகோணமலை, தம்பலகாமம், மெல்லிப்பொத்தானைப் பிரதேசத்தில் நேற்று நண்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கோபால் பாலசுப்பிரமணியம் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே இவரது வர்த்தக நிலையத்தில் வைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# அவசர அவசரமாக ஆயுதக் கொள்வனவு

## ஜனாதிபதி பணிப்புரையாம்

கொழும்பு,மே22

பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான அனைத்து வகையான ஆயுதங்களையும் துரிதமாகக் கொள்வனவு செய்வதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்கியுள்ளார் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை வருமானால் புலிகள் தீவிரப் போரை நாடுவர் எனவும்-

அத்தகைய சந்தர்ப்பத்தை எதிர்கொள்வதற்கான ஆயத்த நடவடிக்கையாகவே ஜனாதிபதி மேற்கண்டவாறு உத்தரவை வழங்கியுள் ளார் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதக் கொள்வனவு பெரும்பாலும் பிரான்ஸிடமிருந்தே மேற்கொள்ளப்படும் என்றும் -

கடற்படையினருக்குத் தேவையான ஆயுதங்களே இம்முறை அதிகமாகக் கொள்வனவு செய்யப்படும் என்றும் -

அரச தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (க)

# ஐந்து போர் விமானங்கள் புலிகள் வசம் உள்ளனவாம்!

கொழும்பு,மே 22

விடுதலைப் புலிகள் தம்வசம் ஐந்து இலகு ரக போர் விமானங்களை வைத்திருக்கின்றனர் என வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவுத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

செக் குடியரசுத் தயாரிப்பான 'சற்- 143' விமானமும் இந்த ஐந்து விமானங்களில் ஒன்றாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மணிக்கு சுமார் 200 நொட்ஸ் வேகத்தில் 15 ஆயிரம் அடி உயரத்தில் இந்த விமானங்கள் பறக்கவல்லன.

மேலும் 250 கிலோ முதல் 400 கிலோ வரையிலான வெடிபொருட்களையும் இந்த விமானங்கள் காவும் வல்லமை கொண்டனவென மேற்படி செய்தி ஏஜென்ஸிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த அப்பாவி விவசாயியான பாலசுப்பிரமணியம் என்பவரை படையினர் சுட்டுக்கொன்று விட்டுத் தொடர்ந்து நகர்வை மேற்கொண்டு, புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முகாமுக்குள் இருந்த பொருள்களை அடித்து நொறுக்கிய இராணுவத்தினர், முகாமை எரியூட்டியுள்ளனர். இராணுவத்தினரின் நகர்வையடுத்து போராளிகள் முகாமைவிட்டுவெளியேறிச் சென்றுவிட்டதால் போராளிகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்தப் போர் நிறுத்த மீறல் குறித்து புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடுசெய்துள்ளார். (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது அணிக்கு தலைமை தாங்கிச் சென்றி ருந்தார்.

86ஆம் ஆண்டு ஜெயந்தன் சிறபபுப் படையணியில் இணைந்து கொண்ட இவர் விடுதலைப் புலிகளின் படைத் துறைப் புலனாய்வுப் பிரிவின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளராக நீண்டகாலமாக பணிபுரிந்தவராவார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைவிட இந்த 20 மன்றங்களுக்கான தேர்தலில் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய என்பன பெரும் பின்னடைவையே சந்தித்திருக்கின்றன.

அதேசமயம், கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு மன்றங்களைக் கைப்பற்றியுள்ளது.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலிலும் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நாவிதன்வெளி பிரதேச சபையைக் கைப்பற்றியுள்ளது.

வத்தேகம நகர சபைக் குப் போட்டியிட்ட ஜே.வி.பி. வெறும் 96 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டது.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காலியில், மாநகர சபைக்குப் போட்டியிட்ட ஹெலஉறுமய ஆக 353 வாக்குகளை மட்டுமே பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)


BIT தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்

BIT தெரிவுப் பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த அனைத்து மாணவர்களின் நலன்கருதி 27.05.2006 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வழிகாட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் இதில் பங்கு பற்றி பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

Director
IISCITY CAMPUS
# 200, Sivan Pannai Road,
Jaffna.
Tel : 021 222 8060

A/L
இறுதி கருத்தரங்கு
புவியியல்
பாபு
23.05.2006 8 a.m.
C.C.A.
சுன்னாகம்.
(50377)

324, Palaly Road, Jaffna.
A/L 2007 GIT
பொதுத் தகவல் தொழில்நுட்பம்
க.பொ.த. உயர்தரம் - 2007
General Information Technology
G.C.E. Advanced Level - 2007
Speed Batch G.I.T. Exam Aug. 2006
பதிவுகள் 25th May 2006க்கு முன்னர் நேரில்
முதல் 20 மாணவர்கட்கு மட்டுமே அனுமதி
Supported by UNDP/JRRP

ஐடியல் அக்கடமி
கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்
O/L DAY CLASS - 2006
பிரிவு - 2
ஆரம்பம்: 22.05.2006 இன்று காலை 8 மணிக்கு

| | |
|---|---|
| கணிதம் V.N.பத்மநாதன் T.ரவீந்திரன் | விஞ்ஞானம் A.தபேசன் |
| தமிழ் P.தமிழ்மாறன் | சமூகக்கல்வி A.K.றொபின்சன் |
| ஆங்கிலம் P.மதன் | சமயம் S.கவிதரன் |
| வர்த்தகம் S.கிருபாகரன் | விவசாயம் K.சுகாஸ் |

குறிப்பு: இந்த மாதக் கட்டணம் Free.
(50373)

மணல் விநியோக அறிவித்தல்

எமது நிறுவனத்தால் நாளை 23.05.2006 செவ்வாய்க்கிழமை தொடக்கம் மணல் விநியோகம் நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் 09.05.2006, 10.05.2006 ஆகிய திகதியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கும் மணல் விநியோகம் நடைபெறும்.

- நிர்வாகம்.
(50387) (24)


# மரண அறிவித்தல்கள்

## இராசையா முத்துலிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்கள ஊழியர்)



கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா முத்துலிங்கம் அவர்கள் 18.05.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா- நாகம்மா தம்பதியின் மகனும் பாக்கியவதியின் அன்புக் கணவரும் விசாலாட்சி, மனோன்மணியின் அன்புச் சகோதரரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட சுரேஷ்குமார், சுசிலாதேவி, சசிகலாதேவி, புஸ்பதேவி ஆகியோரின் தந்தையும் அருளாந்தன், சிவானந்தன், சுந்தரலிங்கம், சர்மினி ஆகியோரின் மாமனும் டினேஸ், டிசேந்தன், டிலக்ச்சனா, ஜெனனி, ஜெனிபன், கிரிஷான், லட்சியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாதன்பவனம்,
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில். (50389) (24)

தகவல்:
யோகன் (மருமகன்),
மனைவி, மக்கள்.

## யோகநாதன் பிறேமநந்தினி



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் பிறேமநந்தினி நேற்று (21.05.2006) ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதன் - வள்ளிமலர் தம்பதியரின் அன்பு மகளும் பிறேமானந்தன், பிறேமதர்சினி, பிறேம சுமித்திரா, கபிலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மராஜா, சதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் தர்சிகா, சகானா, கவின் ஆகியோரின் பெரிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2006) திங்கட்கிழமை இலக்கம் 24, இராமநாதன் வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு. (50393)

தகவல்:
கபிலன்
(கபிலன் பந்தல் சேவை).

## சுப்பையா சொக்கநாதன்

(உரிமையாளர், நாதன் பிறதேஸ், கொழும்பு-11)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சொக்கநாதன் (உரிமையாளர், நாதன் பிறதேஸ் -கொழும்பு) அவர்கள் 20.05.2006 சனிக்கிழமைமாலை கொழும்பில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையா செல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும் திருமதி புஸ்பவல்லியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (U.K), பிராபாகரன் (நாதன் பிறதேஸ் - கொழும்பு), திருமதி சுதர்மதி, சுதாகரன் (பிரான்ஸ்), புவனேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாநினி, உஷாந்தி, சிங்கார குமாரன் (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்பு மாமனும் செல்வன் ஹரிச்துர்யனின் அன்புப் பேரனும் தெட்சானாமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திவாகரமூர்த்தி (நாதன் பிறதேஸ் - கோண்டாவில்), தில்லையம் பலம் (U.S.A.), இராசேந்திரம் (கனடா), பாலசுந்தரம் (பாலா கென்ஸ்ரக்ஷன் கம்பனி), திருமதி இராஜசௌந்தரி, (U.S.A.), திருமதி சௌபாக்கியலட்சுமி, ஸ்ரீ இராமச்சந்திரன் (நாதன் பிறதேஸ், இணுவில் - சுன்னாகம்), சிவசுப்பிரமணியம் (U.S.A), விக்கினேஸ்வரன் (நோர்வே), சண்முகராஜா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைடூரியம் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி அதிகாரி) காலஞ்சென்ற கனகசபாபதி (தபால் அலுவலக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.20, ஆதர்ஸ் பிளேஸ், பம்பலப்பிட்டியில் நடைபெற்று, இன்று (22.05.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.சு.ஸ்ரீராமச்சந்திரன் (தம்பி)
(நாதன் பிறதேஸ், இணுவில்).
011 2508320 (56392)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org